**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 141/மா/2025**
**நாள்: 07.10.2025**

திருமதி T. சுமித்திரா
சென்னை – முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,
மண்டலம் 7,
பெருநகர சென்னை மாநகராட்சி – எதிர்மனுதாரர்

சென்னை 58, அத்திபட்டு, ராம்பூர்ணம் நகர் விரிவாக்கம், கதவு எண் 11 என்ற முகவரியில் வசிக்கும் திருமதி T. சுமித்திரா என்பவரின் 19.03.2025 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 21.03.2025–ல் பெறப்பட்டு 141/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

சென்னை 58, அத்திபட்டு, ராம்பூர்ணம் நகர் விரிவாக்கம், கதவு எண் 11 என்ற முகவரியில் வசிக்கும் திருமதி T. சுமித்திரா என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள 19.03.20255 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:-

> “எங்கள் layout கடந்த 2016ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சியினரால் சாலைக்கு Gift Deed மற்றும் development charges பெற்றுக் கொண்டு approval வழங்கப்பட்டது. Development charges பெற்றுக் கொண்ட சென்னை மாநகராட்சி செய்ய வேண்டிய சாலை போடுதல் மற்றும் தெருவிளக்கு அமைத்தல் போன்ற அடிப்படை வசதிகளை 9 ஆண்டுகளாக செய்து தரவில்லை.
>
> இந்நிலையில் கடந்த 2021ம் ஆண்டு முதல் எங்கள் layoutல் ஒவ்வொருவராக வீடு கட்டி குடிப் பெயர்ந்தோம். எங்கள் layout ல் தற்போது வீடு கட்டியுள்ள அனைவரும் சென்னை மாநகராட்சியிடம் கட்டட அனுமதி மற்றும் திட்ட அனுமதிக்கு கட்டணம் செலுத்தி அனுமதி பெற்று வீடு கட்டியுள்ளோம். எங்களுக்கு தெருவிளக்கு இல்லாததால் இரவு நேரங்களில் மாலை 6.30 மணி மேல் எங்கள் பணிகளை மேற்கொள்ள மிகவும் சிரமாக உள்ளது. மேலும், பாம்புகளின் நடமாட்டம் அதிகமாக இருப்பதாலும், இரவு நேர பாதுகாப்பு அச்சுறுத்தல்களுக்கும் எங்களால் 6.30 மணிக்கு மேல் குழந்தைகளை சிறப்பு வகுப்புகளுக்கு அனுப்புவது மற்றும் வெளியில் சென்று செய்து வர வேண்டிய வேலைகளை சென்னை மாநகராட்சி தெரு

விளக்குகள் அமைத்து தராததால் எங்களால் செய்ய இயலாமல் மிகவும் அவதிக்குள்ளாகிறோம்.

இந்நிலையில் தெரு விளக்கு வேண்டி எங்கள் தெருவில் வசிப்பவர்களிடம் கையொப்பம் பெற்று கடந்து 18.08.2023 சென்னை மாநகராட்சி zone 7 அலுவலகத்தில் மனு அளிக்கப்பட்டது. மேலும், சென்னை மாநகராட்சியின் புகார் இணையதள சேவையை பயன்படுத்தி சாலை வேண்டி புகார் மனு எண் 2023-103 QBG மற்றும் மழைநீர் கால்வாய் வேண்டி புகார் மனு எண் 2023-887 FGBமற்றும் தெரு விளக்கு வேண்டி புகார் எண் 2023-656AEL மனு பதிவு செய்யப்பட்டது.

அதற்கு, சென்னை மாநகராட்சி அலுவலர்களால் சாலை போடுதல், மழைநீர் கால்வாய் அமைத்து தர நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும், தெரு விளக்கிற்கு தங்களின் பகுதி GCCக்கு சொந்தமானதா என்று உறுதியாகும் பட்சத்தில் தெருவிளக்கு அமைத்து தரப்படும் என்று மாநகராட்சி அலுவலர்களின் பதில் இணையத்தில் பதிவு செய்யப்பட்டு இருந்தது. ஆனால், இப்பணிகளை மேற்கொள்ள மாநகராட்சி அலுவலர்களால் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

இந்நிலையில் சென்னை மாநகராட்சி அலுவலர்களை அலுவலகம் Zone 7ல் நேரில் சந்தித்து எங்களுக்கு அடிப்படை வசதிகளை செய்து தரும்படி வேண்டிக் கொள்ளப்பட்டது. மேலும், கடந்த 10.12.2024 அன்று சென்னை மாநகராட்சி தலைமை அலுவலகமான ரிப்பன் மாளிகையில் எங்களுக்கு அடிப்படை வசதி வேண்டி மனு அளிக்கப்பட்டது.

அத்துடன் சென்னை மாநகராட்சி புகார் இணையத்தில் புகார் எண் 2024-468 EAல் மழைநீர் கால்வாய் வேண்டியும், புகார் எண் 2024-591 DBC தெரு விளக்கு வேண்டியும் மனு செய்யப்பட்டது. அதற்கும் கடந்த இரண்டு ஆண்டுகளாக பதிவு செய்திருக்கும் பதிலை தான் மாநகராட்சி அலுவலர்கள் பதிவு செய்து இருந்தனர்.

அதனால், CM cell helpline Portalல் மழைநீர் கால்வாய் வேண்டி மனு எண் 10629952/10.01.2025 மற்றும் தெரு விளக்கிற்கு 10724976/29.01.2025, சாலை வேண்டி 11114406 மனு செய்யப்பட்டது.

இப்புகார்களுக்கும் சென்னை மாநகராட்சி அலுவலர்களால் தங்களின் பகுதி சாலை சென்னை மாநகராட்சி Road Ward Registerல் பதிவு செய்யப்படவில்லை. பதிவு செய்த பின் அடிப்படை வசதிகள் செய்து தரப்படும் என்று அலுவலர்களால் புகார்களுக்கு பதில் அளிக்கப்பட்டிருந்தது.

ஐயா, எங்கள் layout approvalன் போதோ (2016ல்) சாலைக்கு Gift Deed மற்றும் development charges பெற்றுக் கொண்ட சென்னை மாநகராட்சி அலுவலர்கள் அப்போதே முறையாக மாநகராட்சி road ward Registers பதிவேற்றம் செய்யப்பட்டு இருக்க வேண்டும். ஆனால், அப்பணியை மேற்கொள்ளாமல் நாங்கள் அடிப்படை வசதி வேண்டி zone 7 அலுவலர்களை அணுகியும் கடந்த இரண்டு ஆண்டுகளாக Road Ward Registerல் பதிவு செய்யும் பணி நடைப்பெற்றுக் கொண்டு இருக்கிறது என்ற பதிலை மட்டும் சொல்லிக் கொண்டு இருப்பது முறையற்றது. இது அதிகப்படியான காலதாமதம் என்றே நான் கருதுகிறேன். நாங்கள் இதுவரை முறையாக property taxம் சென்னை மாநகராட்சிக்கு செலுத்தி வருகிறோம்.

Layout approval, development charges, Building plan. Permission charges, building approval charges, Vacant land tax மற்றும் property tax

என இவ்வளவு தொகையும் எங்களிடம் வசூலித்துவிட்டு, எங்களுக்கு அடிப்படை வசதிகளை செய்து தராமல் காரணங்களை கடந்த இரண்டு ஆண்டுகளாக கூறிக் கொண்டு இருப்பது சிறிதும் நியாயமாகாது.

ஐயா, எங்களின் தெருவில் பாம்புகளின் நடமாட்டம் அதிகமாக உள்ளது. இரவில் தெரு விளக்குகள் இல்லாத காரணத்தால் வெளியில் செல்லவும், குழந்தைகளை சிறப்பு வகுப்புகளுக்கு மாலை வேளையில் அனுப்புவதற்கு மிகவும் பயமாக உள்ளது. இந்த இரண்டு காரணங்களும் எங்கள் வளர்ச்சிக்கு தடையாக இருப்பதாவே நான் கருதுகிறேன்.

மேலும், எங்கள் பகுதியில் மழைநீர் கால்வாய் அமைத்து மேம்படுத்தப்பட்ட பகுதியாகும். எங்கள் தெருவில் மழைநீர் கால்வாய் சுமார் 80 முதல் 90 மீட்டருக்கு இல்லாததாலும், சற்றே தாழ்வாக இருப்பதாலும் எங்கள் தெருவில் 3 முதல் 4 அடிவரை தண்ணீர் எங்கள் தெருவில் நிரம்பிய பின்னர் எற்கனவே சுற்றுப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள மழைநீர் கால்வாயை அடைந்து நீர் செல்கிறது. இது எங்களுக்கு 05.12.2023 அன்று பெய்த மழையில் மிகவும் பொருளாதார சேதாரத்தை எற்படுத்தியது.

ஐயா, எங்களுக்கு தெரு விளக்குகள் மற்றும் மழைநீர் கால்வாய் அமைத்து தந்தால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். மேலும், இது இந்திய குடிமக்களாகிய எங்களின் அடிப்படை உரிமையும் ஆகும்.

எங்களின் அடிப்படை உரிமையை பெற தங்களை அணுகியுள்ளேன். எங்களுக்கு அடிப்படை வசதிகளை செய்து தர ஆவன செய்யும்படி மிகவும் தாழ்மையுடன் வேண்டுகிறேன்.'' என்று தெரிவித்துள்ளார்.

2. மேற்கண்ட மனு மீதான அறிக்கை அனுப்புமாறு இம்முறை மன்ற நடுவ 12.05.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 7ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது.

3. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 7ன் மண்டல அலுவலர் தனது 23.06.2025 நாளிட்ட கடிதம் ம.அ.7 ந.க.எண்.004128/2025–ல் பின்வருமாறு தெரிவித்துள்ளார்:

"பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 7, கோட்டம் 86க்கு உட்பட்ட காளிதாசன் தெருவில் ராம்பூர்ணம் நகர் லேஅவுட் பகுதிகள் CMDA மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு கடந்த 2016 மற்றும் 2019ம் ஆண்டு ஒப்படைக்கப்பட்டது. இந்த லேஅவுட்டில் ராம்பூர்ணாநகர், ராம்பூர்ணாநகர் JR Castle மற்றும் ராம்பூர்ணாநகர் விரிவாக்கம் ஆகிய பகுதிகள் உள்ளன. இதில் ராம்பூர்ணாநகர் மற்றும் ராம்பூர்ணா நகர் விரிவாக்கம் லேஅவுட் 2016ம் ஆண்டிலும், ராம்பூர்ணாநகர் JR Castle லேஅவுட் பகுதி 2019ம் ஆண்டு சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டன. ராம்பூர்ணாநகர் லேஅவுட் பகுதியில் இரண்டு பிரதான சாலைகள் உட்பட 12 சாலைகள் உள்ளன மற்றும் ராம் பூர்ணாநகர் JR castle லேஅவுட்டில் ஒரு பிரதான சாலை உட்பட 5 சாலைகள் உள்ளன. 2016–ம் ஆண்டு CMDA மூலம் ஒப்படைக்கப்பட்ட ராம்பூர்ணா நகர் விரிவாக்கம் லேஅவுட் பகுதியில் ராம்பூர்ணா நகர் விரிவாக்கம் 1வது தெரு மற்றும் ராம்பூர்ணா நகர் விரிவாக்கம் 2வதுதெரு ஆகிய இரண்டு தெருக்கள் உள்ளன. இவ்விரு தெருக்களில் கடந்த 2021–ஆம் ஆண்டு முதல் வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. ராம்பூர்ணாநகர் விரிவாக்கம் லேஅவுட் பகுதியில் தற்போது குறைந்த எண்ணிக்கையிலான வீடுகள் மட்டுமே அமைந்துள்ளன. லேஅவுட் பகுதி பெருநகர சென்னை மாநகராட்சியிடம் ஒப்படைக்கும் போது போடப்பட்ட தார் சாலைகள் தற்போது நல்ல நிலையில் உள்ளன.

மேலும், ராம்பூர்ணாநகர் விரிவாக்கம் லேஅவுட் பகுதியில் அமைந்துள்ள சாலைகளை பெருநகர சென்னை மாநகராட்சியின் நிலம் மற்றும் உடமைத்துறை, வருவாய்துறை, தேர்தல் துறை, மின்னணு தரவு செயலாக்கத் துறை (EDP Cell) மற்றும் புவியியல் தகவல் அமைப்பு துறை (GIS) ஆகிய துறைகளில் பதிவேற்றம் செய்வதற்கு பெருநகர சென்னை மாநகராட்சி மதிப்பிற்குரிய துணை ஆணையர் (வருவாய்/நிதி) அவர்களுக்கு கடிதம் அனுப்பி அடுத்த கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. மேலும் ராம்பூர்ணா நகர் விரிவாக்கம் லேஅவுட் பகுதியில் தெரு மின்விளக்கு அமைக்க பெருநகர சென்னை மாநகராட்சி மின்சாரத் துறை மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சியின் நிலம் மற்றும் உடமைத்துறை, வருவாய்த் துறை, தேர்தல் துறை மின்னணு தரவு செயலாக்கத் துறை(EDP Cell)மற்றும் புவியியல் தகவல் அமைப்புதுறை (GIS)ஆகிய துறைகளில் பதிவேற்றம் பணிமுடிவடைந்தபின் வருகின்ற 2025-2026 நிதியாண்டில் சேதமடைந்த சாலைகளை சீர் அமைப்பதற்கும் மற்றும் மழைநீர் வடிகால்வாய் அமைப்பதற்கும் பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவித்துள்ள கொள்ளப்படுகிறது" என்று குறிப்பிட்டுள்ளார்.

4. இந்நிலையில், மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 14.08.2025 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 24.07. 2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர், தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 14.8.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:

நாங்கள் வசிக்கும் layout-ல் கடந்த 2016 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிக்கு சாலைக்காக Gift Deed கொடுக்கப்பட்டது. மேலும் Development Chargesம் கட்டப்பட்டுள்ளது. நாங்கள் அனைவரும் சென்னை மாநகராட்சியிடம் கட்டிட அனுமதி மற்றும் திட்ட அனுமதி பெற்று வீடுகள் கட்டியுள்ளோம்.

சென்னை மாநகராட்சியில் எங்களுக்கு அடிப்படை வசதிகளுக்கான தெரு விளக்கு, சாலை போடுதல் மற்றும் மழைநீர் கால்வாய் அமைத்துத் தரப்படவில்லை. இதனால், எங்கள் பகுதியில் இரவு நேரங்களில் பாதுகாப்பு இல்லை. விஷ ஜந்துக்களான பாம்புகள் தொந்தரவு உள்ளது. பள்ளிக்கு செல்லும் குழந்தைகள் மிகவும் பயந்து செல்கிறார்கள். மழை காலங்களில் எங்கள் பகுதியின் அருகில் உள்ள ஏரியிலிருந்து மிகுதியான நீர் எங்கள் பகுதிக்கு வந்து தேங்கி பிறகு எங்கள் பகுதியிலிருந்து 90 மீட்டரில் உள்ள மழைநீர் வடிகால் வழியாக செல்கிறது. மழைநீர் வடிவதற்கு 5, 6 நாட்கள் ஆகிறது. இதனால் எங்கள் பகுதியில் உள்ள மக்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். எங்கள் புகார்கள் குறித்து சென்னை மாநகராட்சிக்கு பலமுறை மனு அளித்தும் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. எங்கள் புகார் குறித்து சென்னை மாநகராட்சி உங்கள் பகுதி சாலை சென்னை மாநகராட்சி Road ward Register–ல் பதிவு செய்யப்படவில்லை. பதிவு செய்த பின் அடிப்படை வசதிகள் செய்து தரப்படும் என்று கூறுகிறார்கள். இந்த பதிலையே சென்னை மாநகராட்சி மண்டலம் 7–ல் கடந்த இரண்டு வருடங்களாக தெரிவித்து வருகிறார்கள்.

மழைநீர் கால்வாய் அமைக்கும் வரை எங்கள் பகுதியில் மழைநீர் வரத்தை குறைக்கும் பொருட்டு (Speed Breaker) போன்ற ஏற்பாடுகளை செய்தும் ஏற்கனவே பயன்பாட்டில் உள்ள மழைநீர் கால்வாய் வழியாக மழைநீர் செல்லவும், மேலும் எங்கள் பகுதியில் அடிப்படை வசதிகளான சாலை அமைத்தல், மழைநீர் கால்வாய் வசதி, தெரு விளக்குகள் போன்றவற்றை அமைத்துத் தர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு உத்திரவிடுமாறு இம்முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

6. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 7–ன் உதவிப்பொறியாளர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு 14.8.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜாராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

“பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 7, கோட்டம் 86க்கு உட்பட்ட காளிதாசன் தெருவில் ராம்பூர்ணம் நகர் லேஅவுட் பகுதிகள் CMDA மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு கடந்த 2016 மற்றும் 2019ம் ஆண்டு ஒப்படைக்கப்பட்டது. இந்த லேஅவுட்டில் ராம்பூர்ணாநகர், ராம்பூர்ணாநகர் JR Castle மற்றும் ராம்பூர்ணாநகர் விரிவாக்கம் ஆகிய பகுதிகள் உள்ளன. இதில் ராம்பூர்ணாநகர் மற்றும் ராம்பூர்ணா நகர் விரிவாக்கம் லேஅவுட் 2016-ம் ஆண்டிலும், ராம்பூர்ணாநகர் JR Castle லேஅவுட் பகுதி 2019ம் ஆண்டு சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைப்பட்டன. 2016-ம் ஆண்டு CMDA மூலம் ஒப்படைக்கப்பட்ட ராம்பூர்ணா நகர் விரிவாக்கம் லேஅவுட் பகுதியில் ராம்பூர்ணா நகர் விரிவாக்கம் 1வது தெரு மற்றும் ராம்பூர்ணா நகர் விரிவாக்கம் 2வதுதெரு ஆகிய இரண்டு தெருக்கள் உள்ளன. லேஅவுட் பகுதி பெருநகர சென்னை மாநகராட்சியிடம் ஒப்படைக்கும் போது போடப்பட்ட தார் சாலைகள் தற்போது நல்ல நிலையில் உள்ளன.

ராம்பூர்ணாநகர் விரிவாக்கம் லேஅவுட் பகுதியானது அருகில் உள்ள இடத்தை விட, தாழ்வாக உள்ளதால் அப்பகுதியில் உள்ள 3 ஏரிகளில் உள்ள நீர் இந்த தாழ்வான பகுதியில் தேங்கி பின்னர் அருகில் உள்ள மழைநீர் வடிகால் கால்வாய் மூலம் செல்கிறது. இப்பகுதியில் உள்ள சாலைகள் அமைப்பதற்கு ரூ.11 இலட்சம் மற்றும் ரூ15 இலட்சம் திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இதற்கு அனுமதி பெற்றவுடன் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மேலும், ராம்பூர்ணாநகர் விரிவாக்கம் லேஅவுட் பகுதியில் அமைந்துள்ள சாலைகளை பெருநகர சென்னை மாநகராட்சியின் நிலம் மற்றும் உடமைத் துறை, வருவாய் துறை, தேர்தல் துறை, மின்னணு தரவு செயலாக்கத் துறை (EDP Cell) மற்றும் புவியியல் தகவல் அமைப்பு துறை (GIS) ஆகிய துறைகளில் பதிவேற்றம் செய்ய கோரப்பட்டுள்ளது. மேலும் ராம்பூர்ணா நகர் விரிவாக்கம் லேஅவுட் பகுதியில் தெரு மின்விளக்கு அமைக்க பெருநகர சென்னை மாநகராட்சி மின்சாரத் துறை மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சியின் மேற்கண்ட துறைகளில் பதிவேற்றம் பணிமுடிவடைந்தபின் வருகின்ற 2025-2026 நிதியாண்டில் சேதமடைந்த சாலைகளை சீர் அமைப்பதற்கும் மற்றும் மழைநீர் வடிகால்வாய் அமைப்பதற்கும் பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் மேலும் மேற்கண்ட பகுதிக்கு சாலை வசதி மற்றும் மின் விளக்கு வசதிகள் 3 மாதங்களுக்குள் நிறைவேற்ற உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

7. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், புகைப்படங்கள் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 7–இன் செயற் பொறியாளர் அவர்களின் அறிக்கை மற்றும் உதவிப்பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

மனுதாரர் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 7, கோட்டம் 86க்கு உட்பட்ட காளிதாசன் தெருவில் உள்ள லேஅவுட் பகுதிகள் ராம்பூர்ணாநகர் மற்றும் ராம்பூர்ணா நகர் விரிவாக்கம் லேஅவுட் பகுதியில் உள்ள பொது மக்கள் பெருநகர சென்னை மாநகராட்சியிடம் கட்டிட அனுமதி பெற்று வீடுகளை கட்டியுள்ளனர் என்பதும், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய காலி மனை வரி, சொத்து வரி மேம்பாட்டு கட்டணம் செலுத்தியுள்ளனர் என்பதும், அடிப்படை வசதிகள் வேண்டி சென்னை மாநகராட்சியில் மனுக்கள் செய்துள்ளனர் என்பதும் ஆனால் சென்னை மாநகராட்சி செய்ய வேண்டிய அடிப்படை வசதிகளான சாலை போடுதல் மற்றும் தெருவிளக்கு அமைத்தல், மழைநீர் கால்வாய் அமைத்தல் போன்ற அடிப்படை வசதிகளை இதுநாள் வரை பெருநகர சென்னை மாநகராட்சியால் செய்துதரப்படவில்லை என்பதும், மேற்கண்ட அடிப்படை வசதிகளை செய்து கொடுக்க உரிய ஆணைகள் பிறப்பிக்குமாறு முறையிட்டுள்ளார் என்பது மனுதாரரின் புகார் மற்றும் வாக்கு மூலத்திலிருந்து அறிய முடிகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 7, கோட்டம் 86க்கு உட்பட்ட காளிதாசன் தெருவில் ராம்பூர்ணம் நகர் லேஅவுட் பகுதிகள் CMDA மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு கடந்த 2016 மற்றும் 2019ம் ஆண்டில் ஒப்படைக்கப்பட்டது என்பதும் ராம்பூர்ணா நகர் விரிவாக்கம் 1வது தெரு மற்றும் ராம்பூர்ணா நகர் விரிவாக்கம் 2வதுதெரு ஆகிய இரண்டு தெருக்கள் உள்ளன என்பதும், லேஅவுட் பகுதி பெருநகர சென்னை மாநகராட்சியிடம் ஒப்படைக்கும் போது போடப்பட்ட தார் சாலைகள் தற்போது நல்ல நிலையில் உள்ளன என்பதும், ராம்பூர்ணாநகர் விரிவாக்கம் லேஅவுட் பகுதியானது அருகில் உள்ள இடத்தை விட, தாழ்வாக உள்ளதால் அப்பகுதியில் உள்ள 3 ஏரிகளில் உள்ள நீர் இந்த தாழ்வான பகுதியில் தேங்கி பின்னர் அருகில் உள்ள மழைநீர் வடிகால் கால்வாய் மூலம் செல்கிறது என்பதும் இப்பகுதியில் உள்ள சாலைகள் அமைப்பதற்கு ரூ.11 இலட்சம் மற்றும் ரூ15 இலட்சம் திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பதும், இதற்கு அனுமதி பெற்றவுடன் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளது என்பதும், ராம்பூர்ணா நகர் விரிவாக்கம் லேஅவுட் பகுதியில் தெரு மின்விளக்குகள் அமைக்க பெருநகர சென்னை மாநகராட்சி மின்சாரத் துறை மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதும் பெருநகர சென்னை மாநகராட்சியின் உரிய துறைகளில் இப்பகுதியின் விவரங்கள் பதிவேற்றம் பணிமுடிவடைந்தபின் வருகின்ற 2025-2026 நிதியாண்டில் சேதமடைந்த சாலைகளை சீர் அமைப்பதற்கும் மற்றும் மழைநீர் வடிகால்வாய் அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளது என்பதும் மேற்கண்ட பகுதிக்கு சாலை வசதி மற்றும் மின் விளக்கு வசதிகள் 3 மாதங்களுக்குள் நிறைவேற்ற உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 7–இன் செயற்பொறியாளரின் அறிக்கை மற்றும் உதவிப் பொறியாளரின் வாக்குமூலத்திலிருந்து அறியமுடிகிறது.

8. இந்நேர்வில், ராம்பூர்ணாநகர் விரிவாக்கம் லேஅவுட் பகுதியில் அமைந்துள்ள சாலைகளை பெருநகர சென்னை மாநகராட்சியின் நிலம் மற்றும் உடைமைத் துறை, வருவாய் துறை, தேர்தல் துறை, மின்னணு தரவு செயலாக்கத் துறை (EDP Cell) மற்றும் புவியியல் தகவல் அமைப்பு துறை (GIS) ஆகிய துறைகளில் பதிவு செய்ய வேண்டிய பணிகளை விரைவாக பதிவேற்றம் செய்யவும், 2025-2026 நிதியாண்டில் சேதமடைந்த சாலைகளை சீரமைக்கவும் மேலும் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 7–ன் உதவிப் பொறியாளர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு மேற்கண்ட பகுதிக்கு சாலை வசதி மற்றும் மின் விளக்கு வசதிகள் 3 மாதங்களுக்குள் நிறைவேற்ற உரிய

நடவடிக்கை எடுக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 7–ன் மண்டல அலுவலருக்கு உரிய உத்தரவினை பிறப்பிக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2025-ஆம் ஆண்டு அக்டோபபர் 07-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணைவெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்
1) திருமதி T.சுமித்திரா,
எண் 11, ராம் பூர்ணம் நகர் விரிவாக்கம்,
அத்திப்பட்டு,
சென்னை 600 058.
2) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை 600 003.
3) உதவி ஆணையர்,
மண்டலம் 7,
பெருநகர சென்னை மாநகராட்சி,
திருவள்ளுர் நெடுஞ்சாலை,
டன்லப் எதிரில்,
சென்னை 600 053.
4) மண்டல அலுவலர்,
மண்டலம் 7,
பெருநகர சென்னை மாநகராட்சி,
திருவள்ளுர் நெடுஞ்சாலை,
டன்லப் எதிரில்,
சென்னை 600 053.
5) கண்காணிப்பாளர் / ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
மழைநீர் வடிகால் துறை,
பெருநகர சென்னை மாநகராட்சி,
சென்னை–600 003.

நகல்:
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

9/10/25
செயலாளர்.
9/10

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
வாய்மையே வெல்லும்
சென்னை–600 032